# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 13 புதன்கிழமை (26-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 119


# அரபாத்தின் மத்தியஸ்த உதவியை இலங்கை அரசாங்கம் நிராகரித்தது!

## புலிகளுடன் சமரசம் அசாத்தியம் என்கிறார் அமைச்சர் கதிர்காமர்

கொழும்பு, மார்ச் 26

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிப்பதாக பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் தெரிவித்த உதவியை அரசாங்கம் நிராகரித்து விட்டது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அரபாத்தின் முன்னிலையிலேயே அவரது உதவியை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நிராகரித்தார்.

எந்தவொரு இணக்க நிலையையும் ஏற்காமல் மீறி வரும் விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்வதற்கு வாய்ப்பில்லை என்றும் அமைச்சர் கதிர்காமர் காரணம் தெரிவித்தார்.

இலங்கைக்கு இரண்டுநாள் உத்தியோக பூர்வவிஜயத்தை மேற்கொண்டிருந்த அதிபர் அரபாத், கொழும்பில் நேற்று முன்தினம் நிகழ்த்திய விசேட சொற்பொழிவு ஒன்றின் போது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மத்தியஸ்தராகப் பணி புரியத் தயாராக உள்ளதாகத் தமது விருப்பத்தை தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப தேர்தல் வெற்றி போருக்கான அங்கீகாரமோ ...?

## 500 பயணிகள் கப்பலில் நாளை பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு 500 பயணிகளுடன் கப்பல் சேவை ஒன்று நாளை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 551 இக்கு உட்பட்டவர்களை நாளை காலை 7 மணிக்கு முன்பாக யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. கப்பலில் பய

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு மாநகரசபை:

## கரு ஜெயசூரியாவுக்கு கூடுதல் விருப்பு வாக்கு

கொழும்பு, மார்ச் 26

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட கரு ஜெயசூரியா ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

கருஜெய சூரியா 47 ஆயிரத்து 350 வாக்குகளையும்—

லீலானந்த பெரேரா 26 ஆயிரத்து 375 வாக்குகளையும்—

ஜோசப் சார்ள்ஸ் 9 ஆயிரத்து 432 வாக்குகளையும்—

மகேந்திரன் 6 ஆயிரத்து 831 வாக்குகளையும் — விருப்பு வாக்குகளாகப் பெற்று மாநகர சபைக்கு தெரிவாகியுள்ளனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவுடன் போட்டியிட்ட சுயேச்சைக் குழுவில் —

சுதந்திரக்கட்சியைக் சேர்ந்த ஆனந்த வஸந்த நாணயக்காரா 25 ஆயிரத்து 79 வாக்குகளையும் —

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ரி.கே. ஆசூர் 16 ஆயிரத்து 924 வாக்குகளையும் —

மேயர் பதவிக்கு என முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட கே. கணேசலிங்கம் 14 ஆயிரத்து 625

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வெடிப்பொருள்கள் நிரம்பிய இரும்புப் பெட்டி

### அநுராதபுரத்தில் மீட்பு

கொழும்பு, மார்ச் 26

வெடிப்பொருள்கள் நிரம்பிய இரும்புப்பெட்டி ஒன்று அநுராதபுரம் மல்வத்த ஓயாவுக்கு அருகில் உள்ள பெரிமியாங்குளம் பகுதியில் பற்றைக்காட்டில் இருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது,

பொலீஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில்

## கூடுதல் புள்ளிகள் பெற்றோருக்கு மக்கள்வங்கிகளில் எழுதுநர்பதவி

யாழ்ப்பாணம், மார்ச் 26

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றவர்கள் தற்காலிக அடிப்படையில் எழுதுநர்களாக நியமிக்க யாழ். மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பரீட்சையில் தோற்றி ஒவ்வொரு துறையிலும் கூடி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கும் எமது இயக்கத்துக்கும் தொடர்பு எதுவுமே கிடையாது!

### யசீர் அரபாத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

தமது பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்று பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் தெரிவித்தார்.

அமைச்சர் கதிர்காமருடன் இணைந்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அரபாத் மேற்கண்டவாறு சொன்னார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்துக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அரபாத் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுக்கு எமது இயக்கம் பயிற்சி எதனையும் அளிக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் எமது இயக்கத்துக்கும் இடையில்ஒத்த தன்மைகள் காணப்படுவதாகக் கருதப்படுவது தவறு. புலிகள் இயக்கம் முற்றிலும் வேறுபட்டது.

பலஸ்தீனில் உள்ள வேறு அமைப்புகளுடன் விடுதலைப் புலிகளுக்கு உறவு இருக்கக் கூடும்.

நாம் யாருக்கும் கெரிலாப் பயிற்சி அளிப்பதில்லை — என்றார்.

(அ-5)

## திருமலை பல்கலை. கல்லூரி வளாகமாகும்

கொழும்பு, மார்ச் 26

திருகோணமலைஇணைந்த பல்கலைக்கழக கல்லூரியை பல்கலைக்கழக வளாகமாக்க பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வளாகத்தை நிலாவெளி 6 ஆம் கட்டையில் 50 ஏக்கர் காணியில் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைஇணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி தற்சமயம் முன்னாள் முதலமைச்சரின் அலுவலகத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் இயங்கிவந்த வடமாகாண இணைந்த பல்கலைக்கழக கல்லூரி யாழ். பல்கலைக்கழகத்தின் வளாகமாக ஏற்கனவே மாற்றப்பட்டது தெரிந்ததே.

(இ-3-150)

## சுஸந்த புஞ்சி நிலமே உயிருக்கு ஆபத்து

### சிறையை மாற்ற நடவடிக்கை

கொழும்பு. மார்ச் 26

இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவெல கொலைச் சந்தேகநபரான இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஸந்த புஞ்சி நிலமேயின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சுஸந்த புஞ்சி நிலமே தற்போது மகர சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

நாலந்த எல்லாவெல கொலை தொடர்பான

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியிலிருந்து படகில்வந்தோர்

## விசேட அடையாள அட்டை பெற்ற பின்பே வீடுசெல்ல அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 26

வன்னியில் இருந்து படகுகள் மூலம் குருநகர் இறங்குதுறையை அடைந்து தற்காலிக முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விசேட அடையாள அட்டையைப் பெற்ற பின்பே வீடு செல்ல அனுமதிக்கப்படுவர்.

மேற்கண்ட தகவலை யாழ். பதில் பிரதேச செயலர் ச. பேரானந்தன் தெரிவித்தார்.

இவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

அவை வழங்கப்பட்டதும் இவர்கள் தமது வீடுகளுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
**வைரரத்தினம் வினாயகமூர்த்தி**
மானிப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர்
**லயன்ஸ் செ. கேசவராசன்** அவர்களின்
மாமியார்

**திருமதி வைரரத்தினம் வினாயகமூர்த்தி**
அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

**லயன்ஸ் கழகங்கள்**
**வலயம் II - நல்லூர், வவுனியா,**
**கோப்பாய், சாவகச்சேரி.**

வலயத் தலைவர்
டாக்டர் லயன் **S. S.** அருளானந்தமும்
குடும்பமும்

(C/374)

# மரண அறிவித்தல்கள்

## கனகராசா நித்தியராசா (நித்தி)

இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகராசா நித்தியராசா (நித்தி) 24-03-1997 அன்று மரணமானார்.

இவர் நன்னித்தம்பி கனகராசா தம்பதிகளின் கடைசி மகனும், அருந்ததியின் அன்புக் கணவரும், நிறோசனனின் அன்புத் தந்தையும்,தவராசா (சுவிஸ்), இறஞ்சிதமலர் (சுவிஸ்), சுவேந்திரராசா (ஜேர்மனி), நிர்மலாதேவி (சுவிஸ்), ஆனந்தராசா (இந்தியா), செல்வராசா (ஜேர்மனி), விஜயமணி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தம்பியும், அற்புதம், கோபால கிருஷ்ணன், பாமதி, அரசன், யோகராசா திருமதி செல்வா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும், இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
**ந. கனகராசா**
(தகப்பன்)

இருபாலை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(45983)

## திருமதி கமலாவதி குபேந்திரபதி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி குபேந்திரபதி 24-03-97இல் காலமானார்.

இவர் குபேந்திரபதியின் (ஓய்வு பெற்றலிகிதர்) அன்பு மனைவியும் சந்திரலட்சுமியின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியத்தின் மாமியாரும், ஜெயந்தா, யசோதா, இராகுலன், ஜசிந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற இராமநாதன் (கோண்டாவில்) மற்றும் சிவலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26-03-97) புதன்கிழமை மருமகளின் இல்லத்தில் (உரும்பிராய் வடக்கு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணிக்கு இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**A.R. பாலசுப்பிரமணியம்**
(துரை மருமகன்)

உரும்பிராய் வடக்கு.

(45984)

## திருமதி மனோன்மணி மார்க்கண்டு (வேலணை)

வேலணை மணியகாரன் வீட்டடியைப் பிறப்பிடமாகவும், தற்போது ஸ்கந்தபுரத்தில் வசித்து வந்தவருமான திருமதி மனோன்மணி மார்க்கண்டு 20-03-97 இல் (வியாழக்கிழமை) சிவபதம் எய்திவிட்டார்.

இவர் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், ஜெயகாந்தன் (இ. மீ. சபை வவுனியா), விஜயகாந்தன் (இலங்கை வங்கி II ஆம் கிளை யாழ்ப்பாணம்), இலட்சுமி காந்தன் (ஜேர்மனி), இராஜமணி, விமலாதேவி (ஜேர்மனி), ஸ்ரீ காந்தன் (பிரான்ஸ்), ரோகினிதேவி (வேலணை ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காந்தரூபி (வவுனியா), திலகவதி, நடேசன் (ஊர்காவற்றுறை, ப. நோ. கூ. சங்கம்), புஸ்பராணி (ஜேர்மனி), ஸ்ரீ வாமதேவன் (ஜேர்மனி), ஆகியோரின் பிரிய மாமியாரும், ஜெனிற், கல்பனா, அரவிந்தன், ஜனனி, சுகிர்தா, சிந்துஜன், வாணிஜா, நிரோஜன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும்,காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை,திருமதி நாகம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற இலங்கைநாயகம், சாந்தநாயகி (கனடா), காலஞ்சென்ற நகுலேஸ்வரி, தேவநாயகம் (இளைப்பாறிய பரிசோதகர், மீன்பிடித் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
**மா. விஜயகாந்தன்** (மகன்)

35, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(45985)

### திருமலையில் இருந்து அகதிகளை ஏற்றிவர

# ஐ.நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் புதிய கப்பல் விரைவில் சேவைக்கு

கொழுப்பு, மார்ச் 26

இடம்பெயர்ந்த குடும்பங்களை திருமலையில் இருந்து கடல் மார்க்கமாக வடக்கே அழைத்துச் செல்லத் தனியான கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்த அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து திருமலைக்கு வந்து அங்கிருந்து கப்பல் மார்க்கமாக யாழ். செல்ல விரும்பும் மக்களை அழைத்துச் செல்லும் பொறுப்பையும் அது ஏற்றுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் கடந்த புதனன்று ஜனாதிபதி செயலகத்தில் நடந்த வடபகுதிக்குச் செல்லும் அகதிகள் தொடர்பான மாநாடு ஒன்றில் இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுளளது.

தற்போது யாழ். செல்லும் குடும்பங்கள் அரசினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களிலேயே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பலுக்கு நாள் ஒன்றுக்கான வாடகையாக 2 ஆயிரத்து 800 டொலர்களை அரசு செலுத்தி வருகிறது என்றும் —

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் தனது சொந்தப் பணத்தில் கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அகதிகளை ஏற்றிச் செல்ல விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் —

இதற்கென ஆயிரம் பேர் பயணம் செய்யக்கூடிய கப்பல் ஒன்றை அது வாடகைக்கு அமர்த்த முன்வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

### திருமலை - காங்கேசன்துறை:

## 'மிஷன்' கப்பல் சேவையில் ஈடுபடுவது கால தாமதம்

திருகோணமலை, மார்ச் 26

திருகோணமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள 'மிஷன்' என்னும் கப்பல் சேவையில் ஈடுபடுவது தாமதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் இருந்து திருகோணமலைக்கு வந்து சேர்ந்த இக்கப்பல் சேவையில் ஈடுபட திருகோணமலை துறைமுக அதிகார சபை இன்னும் அனுமதி வழங்கவில்லை.

ஓரிரு நாள்களில் இந்த அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

## ஆசிரியர் சம்பளம்

குருநகர், மார்ச் 26

யாழ். ஆசிரியர்களின் இம்மாதச் சம்பளம் கல்விக் கோட்டங்களினால் நேற்று வழங்கப்பட்டது.

இம்மாதச் சம்பளத்துடன் விழா முற்பணம் ரூபா ஆயிரத்து ஐநூறும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-51)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, மார்ச் 26

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாரந்தோறும் நடத்தி வரும் நிகழ்வுகளின் வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மாணவர்களின்கலை நிகழ்ச்சி இடம் பெறும்.

இந் நிகழ்ச்சிக்கான அறிமுக உரையை ஆசிரியை திருமதி ஆ. நாகேந்திரம் நிகழ்த்துவார்.

(ஐ-173)

★ ★ ★

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த சங்காபிஷேகம் (1008) இன்று புதன்கிழமை நடைபெறும். காலை 8 மணிக்கு சங்குப் பூசையும் பகல் 11 மணியளவில் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பிற்பகல் 1 மணியளவில் பெருமான் வள்ளி தெய்வானையுடன் வீதியுலா வந்து அருள் பாலிப்பார்.

(ஐ)

## விவேகானந்தர் விழா

சாவகச்சேரி, மார்ச் 26

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் சுவாமி விவேகானந்தர் விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஸ்ரீராம கிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமிகள் சித்ரூபானந்தா கலந்து கொள்வார்.

(இ-31)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

யாழ். பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று புதன் கிழமை காலை [illegible] மணிக்கு சங்கத் தலைவர் இ. குண[illegible]ணம் தலைமையில் சங்க மேல்மாடியில் நடைபெறும்.

(இ-4)

# அறிவித்தல்

**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

**காலம்: 28-03-1997 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி**
(புதிய நேரம்)

**இடம்: கல்லூரி மண்டபம்**

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அ. பஞ்சலிங்கம்** — தலைவர்
**ச. ஆனந்தராஜா** — செயலாளர்

(45988)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 02 — 04 — 1929



உதிர்வு: 07 — 04 — 1996

திருமதி
## செகராசா பாக்கியலட்சுமி
(தலையாழி- கொக்குவில்)

**திதி: 28 - 03 - 1997**
(அமரபக்க சதுர்த்தி)

அன்னையும் அன்புத் தெய்வமுமாய் இருந்து
அங்கையால் ஆனமட்டும் அள்ளிச் சொரிந்திட்டு
செங்கை சிவக்கச் சிரித்து நின்ற - சங்கைமிகு
தங்கையால் வாழ்ந்து தரணியை பிரிந்து
இறைவனடி யேர்த்த
அன்னையே! உங்கள் ஆத்மா சாந்திபெற
அனைவரும் ஒன்று கூடி பிரார்த்தனை செய்வோம்-
இங்கு.

முக்கிய குறிப்பு:- அன்னாரின் குடும்பத்தைச் சேர்ந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் திவசம் குறித்து அறிவித்த போதிலும் அறிவித்தல் பெறத் தவறியவர்கள் இவ்வறிவித்தலை ஏற்று வருகை தரவும்- நன்றி.

தகவல்:
**செ. ஸ்ரீசந்தனராஜா**
(மகன்)

திவசம் இடம் பெறும் இல்லம்:
செ. ஸ்ரீசந்தனராஜா,
அம்பிகாவத்தை,
சங்கானை.

(9435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் ... நூலகம்.

# யெல்ட்சின்-கௌடா மொஸ்கோவில் பேச்சு

மொஸ்கோ, மார்ச் 26

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினும் இந்தியப் பிரதமர் தேவகௌடாவும் உயர் நிலைப் பேச்சுக்களை நேற்று மொஸ்கோவில் ஆரம்பித்தனர்.

நேற்று மாலை கிரெம்ளினில் ஆரம்பமான முதல் கட்டப் பேச்சுககளின் பின்னர் பிரதமர் தேவகௌடா ரஷ்யப் பிரதமர் செர்னோமிடினையும் சந்தித்தார்.

பிராந்திய சர்வதேச விவகாரங்கள் உட்படப் பல விடயங்கள் பேச்சுக்களில் விவாதிக்கப்பட்டன.

பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான விடயமே பேச்சுக்களில் முக்கிய இடம் பிடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் தேவகௌடாவின் தற்போதைய விஜயத்தின் போது ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே ஏழு ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட உள்ளன.

★ இரட்டை வரி விதிப்பை தவிர்த்தல்
★ பயங்கரவாதத்தையும், போதைப் பொருள் கடத்தலையும் ஒடுக்குதல்
★ இரண்டு ரஷ்ய அணு உலைகளை வாங்குதல்
★ பாதுகாப்பு ஒத்துழைப்பு, பொருளாதார உறவுகள் — ஆகிய விவகாரங்கள் இந்த ஒப்பந்தங்களில் அடங்கும்.

முன்னதாக ரஷ்யாவுக்குச் சென்றடைந்த பிரதமர் தேவகௌடாவுக்கு ரஷ்ய; முப்படைகளும் அணிவகுப்பு மரியாதை அளித்தன.

# 9 'ஒஸ்கார்' விருதுகளை பெற்றுள்ள திரைப்படம்

'ஒஸ்கார்' திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கலை, இலக்கியம், கொஞ்சும் காதல், வீர உணர்ச்சி மிக்க போர்க்காவியப் படைப்பான த இங்லிஸ் பேசன்ற்'' (THE ENGLISH PATIENT) என்னும் திரைப்படம் ஒன்பது ''ஆஸ்கார்'' விருதுகளைத் தட்டிச் சென்றுள்ளது.

சிறந்த திரைப்படம்,சிறந்த இயக்குனர், சிறந்த துணை நடிகை ஆகியவற்றுக்கான விருதுகளும் இந்தத் திரைப் படத்துக்கு கிடைத்துள்ளன.

சிறந்த நடிகனுக்கான விருது ஆஸ்திரேலிய நாட்டவரான ஹெப்றிரஸ் என்பவருக்கு வழங்கப்பட்டது.

உளரீதியில் கலங்கிக் கொந்தளிக்கும் ஒரு பியானோ வாத்திய கலைஞராக இவர் மிக அருமையாக நடித்ததைப் பாராட்டியே இந்த விருது வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு அமெரிக்காவில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன (ஐ(

## துறவிகள்கிளர்ச்சி

மியான்மர் நாட்டில் (பர்மா) பௌத்ததுறவிகளின் கிளர்ச்சி பல நகரங்களுக்கும் பரவி வருவதாக அங்கிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரங்கூனில் உள்ள இரண்டு மசூதிகளை கடந்த சனியன்று பௌத்த துறவிகள் சேதப் படுத்தியதை அடுத்து சுமார் 100 பௌத்த துறவிகளை மியான்மர் பொலீஸார் கைது செய்தனர். அதனையடுத்தே கலவரம் பரவி வருகிறது. (ஐ)

# ஸயர் பிரதமர் இராஜினாமா! — நெருக்கடி வலுக்கிறது!!

கின்ஸாசா, மார்ச் 26

ஸயர் நாட்டு பிரதமர் கிங்குவா டொண்டோ தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார்.

கின்ஸாசாவில் தனது இராஜினாமாக் கடிதத்தை அவர் நேற்று முன்தினம் அதிபர் மொபுட்டுவிடம் கையளித்தார்.

நாட்டில் கால்வாசிப் பகுதியைக் கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததைத் தடுக்க அவர் தவறிவிட்டதால் ஸயர் நாட்டின் இடைக்கால நாடாளுமன்றப் அவரை பதவி நீக்குமாறு வாக்களித்தது.

இதேவேளை — ஸயரின் தெற்கு மற்றும் தென்மேற்குப் பகுதியில் கிளர்ச்சிப் படைகள் தொடர்ந்து முன்னேறி வருவதால் மேலும் இரண்டு நகரங்களில் இருந்து ஸயர் படைகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. இந்தப் படைகள் தலைநகர் கின்ஸாசாவைப் பாதுகாப்பதற்கு அங்கு அனுப்பப்படவுள்ளன.

தென் பகுதி மாகாணமான ஷாபாவின் தலைநகர் முபும்பாஷிக்கு கிளர்ச்சியாளர்கள் முன்னேறி வருவதை அடுத்து அந்த நகரைச் சூறையாடி விட்டுத் தப்பி ஓட எத்தனித்த ஸயர் படைகளுக்கும் அதிபர் முபுட்டுவின் பாதுகாப்புப் பிரிவினருக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ)

# உலக அரங்கில்

## காபூலில் 68 அரச ஊழியர் பதவி நீக்கம்

காபூல், மார்ச் 26

நீளமாக வளர்ந்திருந்த தாடியை குட்டையாகமழித்த குற்றத்துக்காக காபூலில் உள்ள 66 அரச ஊழியர்களை தலிபான் இயக்கத்தினர் பதவி நீக்கம் செய்துள்ளனர்.

இஸ்லாமிய வழக்கப்படி தாடி இயற்கையானது அது முகத்தில் இருக்க வேண்டும். அதனை மழிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று கூறிவரும் தலிபான் இயக்கம் ஆப்கானிஸ்தானில் பெரும் பகுதியைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது. (ஐ-)

# 3 ஆம் உலகநாடுகளில் மீண்டும் காசநோய் வேகமாகப் பரவுகிறது

## உலகசுகாதாரநிறுவனம் எச்சரிக்கை

மணிலா, மார்ச் 26

ரீ. பி. எனப்படும் காசநோய் பழிவாங்கும் வெறியோடு மீண்டும் உலகிற்கு வேகமாகத் திரும்பிவந்து கொண்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது.

இந்தக் கொடியநோய் கட்டு மீறுவதற்கு முன்னர் உலக நாட்டுத் தலைவர்கள் விழித்து எழவேண்டுமென உலக சுகாதார நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

உலகில் மிகக்கொடிய நோய்களில் ஒன்றானஇந்தக் காசநோய் உலக சுகாதார நிறுவனத்தின் திட்டமிட்ட முயற்சிகளால் 1970களின் இறுதியில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்த நோய் இன்று மூன்றாம் உலக நாடுகளில் மீண்டும் வேகமாகப் பரவிவருகிறது.

''எய்ட்ஸ்'' கிருமிகளின் பரவலும் காசநோய் பரவுவதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. காசநோய் குறித்து கவனயீனமாக இருப்பது பெரும் ஆபத்துகளை விளைவிக்கும்.

நேபாளத்தில் ஆண்டுதோறும் காசநோய் காரணமாக சராசரியாக 16 ஆயிரம் மக்கள் மரணமடைகிறார்கள் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (ஐ-10)

# செய்திச் சாரம்

## திரைச்சீலை அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு அடையாளமாக பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் யாழ். மார்புச்சிகிச்சை நிலையத்துக்கு திரைச்சீலை ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 24 மாணவர்களுக்கு கொப்பி, பேனா என்பனவும் வழங்கப்பட்டன. (ஐ)

## குண்டும் குழியுமாக கஸ்தூரியார் வீதி

திருநெல்வேலி மார்ச் 26

யாழ். நகரில் வின்ஸர் படமாளிகைச் சந்தியிலிருந்து பஸ் நிலையம் நோக்கிச் செல்லும் கஸ்தூரியார் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

தினமும் பெரும் எண்ணிக்கையான மக்களும் மற்றும் வாகனங்களும் சென்றுவரும் இந்த பிரதான வீதியில் வீதி விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன. இவ் வீதியை முன்னுரிமை கொடுத்து அவசரமாக திருத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரயாணிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-135)

## புடைவைகள் வழங்கப்பட்டன

குருநகர், மார்ச் 26

கடந்த 10ஆம் திகதியும் 17ஆம் திகதியும் வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக குருநகர் இறங்கு துறையை வந்தடைந்த குடும்பங்களுக்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் பாயும், உடுபுடைவைகளும் வழங்கியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த அகதிகளுக்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் நேரில் சென்று இவற்றை வழங்கினார். (ஐ-51)

## வானொலி அனுமதிப் பத்திரம்

தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தற்போது மீண்டும் குடா நாட்டில் வழங்கப்பட்டு வருகின்றன.

தபாற் கந்தோர்களில் இவற்றுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. (ஐ-173)

## திருவாசகம் முற்றோதல்

சாவகச்சேரி நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலயத்தின் கூட்டுப்பிரார்த்தனைச்சபையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது. விழாவில் பண்டிதர் வ. பேரின்பநாயகம் சிறப்புரையாற்றினார். ஆலயத்தில் தொடர்ந்து திருவாசக முற்றோதல் நிகழ்வு பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும். (ஐ)

## அம்பன் கிராமத்தில் நெற்செய்கை வெற்றி

செம்பியன்பற்று, மார்ச் 26

அம்பன் கமநல சேவை நிலையம் கடந்த ஆண்டு காலபோகத்திற்கென கப்பல் மூலம் தருவித்த பி. ஜி - 35 ரக நெல்லை அம்பன் கிராமத்தில் உள்ள விவசாயி திரு. பத்மநாதன் என்பவருக்கு வழங்கியிருந்தது. இவர் நெல்லை நாற்றுமேடை தயாரித்து நட்டு நீர் இறைத்து வெற்றிகரமாகச் செய்கை பண்ணியுள்ளார்.

இவரது வயலில் பரப்பிற்கு 4 புசல் வீதம் அறுவடை கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக கமநல சேவைப்பகுதியினர் தெரிவித்தனர். இந்த விவசாயியின் முயற்சியை அம்பன் விவசாய போதனாசிரியர் திரு. பொன்னுத்துரை பாராட்டியுள்ளார். (ஐ-36)

## தனியார் வாகனக் கட்டணங்கள் குறையவில்லை

குருநகர், மார்ச் 26

கடந்த காலங்களில் அறவிடப்பட்டு வந்த கட்டணங்களைக் குறைக்க சில தனியார் வாகனச்சொந்தக்காரர்கள் பின்னடிப்பதாகப் பயணிகள் பலர் தெரிவிக்கின்றனர்.

மண்எண்ணெய் உட்பட எரிபொருள்களின் விலைகள் யாழ்ப்பாணத்தில் வீழ்ச்சியடைந்து நீண்ட நாள்கள் கடந்துவிட்ட பிறகும் தனியார் வாகனங்களுக்கான கட்டணம் முன்பு இருந்த அளவிலேயே தொடர்வதாகக் கூறப்படுகிறது. (ஐ-51)

# இடம்பெயர்ந்த குத்தகையாளர் பாதிக்கப்படமாட்டார்கள்

## மாநகர பதில்ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். மாநகர சபையுடன் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள குத்தகையாளர்கள் தற்சமயம் யாழ், மாவட்டத்துக்கு வெளியே இருப்பின் அதனால் குத்தகை விடயத்தில் அவர்கள் எவ்விதத்திதிலும் பாதிப்படைய மாட்டார்கள்.

யாழ். மாநகரசபை பதில் ஆணையாளர் வே. நவரத்தினராசா இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

அண்மையில் யாழ்.மாநகர சபை பத்திரிகையில் வெளியிட்ட அறிவித்தல் ஒன்றினால் இடம் பெயர்ந்துள்ள சபையின் சட்டபூர்வமான குத்தகையாளர்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களை அடுத்தே அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ் மாநகர சபைக்குரிய சில கடைகள் அங்கீகாரமற்ற முறையில் கைமாறியமையை அவதானித்த பின்னரே சபைக்குரிய கடைகளின் சட்டரீதியான குத்தகையாளர்களை இனங்காண வேண்டிய தேவை சபைக்கு ஏற்பட்டது.

அறிவித்தலின் பிரகாரம் இன, மத வேறுபாடுகள் எதுவும் காட்டப்படாது சகல குத்தகையாளர்களும் ஒரே நோக்கில் கணிக்கப்படுகின்றனர்.

சபையுடன் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள குத்தகையாளர்கள் தற்போது யாழ். மாவட்டத்திற்கு வெளியே இருப்பினும் அதனால் அவர்கள் எவ்விதத்திலும் பாதிப்படையமாட்டார்கள். எனினும் அவர்களின் தற்போதைய வதிவிடமுகவரியை எமக்கு அறிவிப்பார்களாயின் நாம் அவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களது குத்தகை உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வங்கி ஊழியர்கள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்.குடா நாட்டில் உள்ள அரசவங்கிக் கிளைகளில் ஊழியர்களுக்குப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

போதிய ஊழியர்கள் இன்மையால் வங்கி நடவடிக்கைகள் சில தாமதமடைந்துள்ளன. (ஐ-173)

## மா தட்டுப்பாடு நீங்கியது

நெடுந்தீவு, மார்ச் 26

நெடுந்தீவில் மாவுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு நீங்கியது நெடுந்தீவு பல.நோ.கூ. சங்கம்நெடுந்தீவுக்குத் தேவையான அளவு மாவை எடுத்துச் சென்றுள்ளது. (ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன விகிதாசார முறை வந்திருப்பின் பிரச்சினை இப்போதுதோன்றியிராது

## பேராசிரியர் நளின் டீ சில்வா சாட்சியம்

கொழும்பு, மார்ச் 26

நாடாளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளை இனவிகிதாசார முறையில் தெரிவு செய்யவேண்டும் என்று 1909 ஆம் ஆண்டில் சேர். ஜேம்ஸ் பீரிஸ் வகுத்த கோரிக்கை நிறைவேற்றப் பட்டிருந்தால் இனப் பிரச்சினை என்று ஒரு பிரச்சினை தோன்றியிருக்க மாட்டாது.

பேராசிரியர் நளின் டீ சில்வா சிங்களக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது;-

பெரும்பான்மைச் சமூகமான சிங்களவருக்கு அதிகாரம் வழங்கப்படுவதை அப்போதைய தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்போதும் எதிர்த்தேவந்தனர். நாடாளுமன்றபிரதிநிதிகளை இனவிகிதாசார அடிப்படையில் தேர்வு செய்யவேண்டு என 1909 இல் சேர். ஜேம்ஸ் பீரிஸ் விடுத்த கோரிக்கை அப்போதைய பிரிட்டிஷ் ஆளுநர் மல்செம்சினால் நிராகரிக்கப்பட்டிருக்காவிடில் இன்று நாட்டில் இனப்பிரச்சினை தோன்றியிருக்காது.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் 11 சதவீதமான தமிழர்களே இருந்தனர். ஆயினும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் தமிழர்களினதும், சிங்களவர்களினதும் எண்ணிக்கை சமமாகவே இருந்தது.

இப்போதைய அரசின் தீர்வுத் திட்டத்தினால் உருவாக்கப்படவுள்ள நிதி ஆணைக்குழுவில் கூட சகல சமூகங்களிலிருந்தும் தலா ஒரு பிரதிநிதியே இடம் பெறவுள்ளனர். சிங்கள மக்கள் பெரும்பான்மைச் சமூகமாக இருந்தபோதும் இந் நிலை இன்னும் காணப்படுவது பிரிட்டிஷாரின் செயற்பாடுகளையே அடியொற்றிக் காணப்படுகிறது.

கல்வியறிவு படைத்த ஒரு சிங்களவரை நாடாளுமன்றப் பிரதிநிதியாக தேர்வு செய்ய தமிழ் மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போது தமிழர்கள் அஞ்சியதுடன் இரு சமூகங்களிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியைத் தேர்வு செய்யும் படி வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால் பிரிட்டிஷார் தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரித்தனர். சிங்கள மக்களின் பிரதிநிதியாக தமிழரான சேர். பொன். இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

சேர். பொன்னம்பலம் இராமநாதனை ஒரு பெருந்தலைவரென்றே பாடப்புத்தகங்கள் எமக்குப் போதித்தன. ஆனால் அவர் ஒரு தமிழினவாதி என்று பல வரலாற்று நூல்களின் மூலம் அறியக் கூடியதாயுள்ளது.

**முதலாவது இனவாதக் கட்சி**

பொன்னம்பலம் அருணாசலத்தினால் 1921 இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மககள் சங்கம் தான் நாட்டின் முதலாவது இனவாதக் கட்சியாக விளங்கியது. தவிர இனவாதத்துக்கு பிரிட்டிஷாரே அடித்தளம் இட்டனர். இன்றும் தமிழ் இனவாதிகள் ஏதாவது ஒன்றைக் கேட்டுப் போராடிக் கொண்டேயுள்ளனர். ஒரு கோரிக்கை நிறைவேற்றப்பட்டதும் மற்றொன்றை முன்வைத்துப் போராடுகின்றனர். இன்று ஈழம் கோரிப் போராடுகின்றனர். அவர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

சமஷ்டி அமைப்பு தான் இன்றைய பிரச்சினைக்கான தீர்வென இந்தஅரசு அழுத்தமாகத்தெரிவித்து வருகிறது. 1926 இல் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா அறியாமையினாலோ அல்லது ஆளுநர் மானிங்கின் தந்திரத்துக்குப் பலியானதாலேயோ அப்போது சமஷ்டி அரசியலமைப்புக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

ஆளுநர் மானிங் இலங்கைக்கு வந்த நாள் முதல் சிங்கள தமிழ்ச் சமூகங்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் விதத்திலேயே செயற்பட்டுவந்தார். சிங்கள மக்களிடையே பிரிவை ஏற்படுத்தவும் அவர் தவறவில்லை. இன்று சிங்களவர்கள் ஒரு சமூகமாக ஒன்றுபட்டு நிற்கிறார்கள். தமிழர்களும் ஏன் சிங்களவர்களுடன் இணைந்து ஒரே சமூகமாக ஒன்றுபட்டுமுடியாது என கேட்க விரும்புகிறேன். என்றார். (அ)


**Institute of Business & Professional Studies**

**C·I·M·A·**

**Stage I**

**வகுப்புக்கள் சித்திரை 97 இல் ஆரம்பம்:**

முகாமைத்துவ கணக்காளர்களுக்கான பட்டய நிறுவனத்தின் (இலண்டன்) நவம்பர் மாதப் பரீட்சைக்கான தயாரிப்பு

★ பதிவு செய்வதற்கான வழிகாட்டல் ★
★ மாதாந்த கருத்தரங்கு ★
★ தொழில்சார் அதிஉயர் தராதரமுள்ளோரின் விரிவுரைகள் ★

தேவையான ஆகக்குறைந்த கல்வித்தராதரம்
க. பொ. த (உயர்தரம்) இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன்
க. பொ. த (சாதாரணம்) கணிதம் மற்றும் ஆங்கிலத்துடன் கூடிய மூன்று திறமைச் சித்திகள்.

அறிமுக அமர்விற்கும், உறுப்பினராகச் சேர்வதற்கும் 29 - 03 - 97 சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு சமுகம் தரவும்.

இடம்:- கொடிகாமம் வீதி, நெல்லியடி.
(திருஇருதய கல்லூரி முன்பாக)

(45907) இயக்குநர்.


## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி ருக்மணி செல்லையா**

(முன்னாள் உரிமையாளர்,
அசோகா ஹாட்வயார் ஸ்ரோர்ஸ்,
51, 53 மத்திய வீதி, திருகோணமலை)

மண்ணில்: **10-11-1936**
விண்ணில்: **04-04-1988**
திதி: **26-03-1997**

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ
அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையிலே
உனை இழந்தோம் மனம் துடித்தோம்
அழவில்லைக் கண்ணீரை விழிதனிலே
நிறைத்துவிட்டு
அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரோ?
ஆண்டுகள் ஒன்பது உருண்டோடிப் போய்விட்ட
போதிலும்
நீர் எமக்கு ஆறுதலைச் சொல்லிவைக்க வந்திடுவீர்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக எந்நாளும்
பிரார்த்திக்கின்றோம்.

அன்பான கணவர் **வ. செல்லையா**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரன், பேர்த்திமார், சகோதரர்கள்.**

வ. செல்லையா,
''அசோக் வாசம்''
ஏழாலை மத்தி, ஏழாலை. (9433)

# கட்டாக்காலி நாய்களை ஒழிக்க வலி. மேற்கில் நடவடிக்கை

அராலி, மார்ச் 26

வலிகாமம் மேற்கு பிரதேச சபை கட்டாக்காலி நாய்களை அழிக்கும் முகமாக கொல்லப்படும் ஒவ்வொரு நாய்க்கும் இருபத்தைந்து ரூபா வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. நாய் கொல்லப்பட்டதை பிரதேச சபை அலுவலகத்தில் நிரூபிப்பவருக்கு உடனடியாக இருபத்தைந்து ரூபா வீதம் கொல்லப்பட்ட ஒவ்வொரு நாய்க்கும் கொடுப்பனவு செய்யப்படும் என பிரதேசசபை விசேட ஆணையாளர் திரு. கா. சந்திரராசா தெரிவித்தார்.

வளர்ப்பு நாய்களை உரிய தடுப்பூசிகள் போட்டு பிரதேச சபையின் அனுமதி பெற்று அதற்குரிய கழுத்துப் பட்டிகளைக் கட்டி வளர்ப்பதன் மூலம் கட்டாக்காலி நாய்களை அழித்து ஒழிக்க உதவுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-12)

## பரிசுத்த வாரம்

**( 3 ஆம் நாள்—புதன்)**

பிரியாவிடை – விருந்து மனம் கலங்கும் இறுதிவார்த்தைகள். 'மனுமகனைக் காட்டிக் கொடுப்பவனுக்கோ ஐயோகேடு; அவன் பிறவாது இருந்திருந்தால் அவனுக்கு நலமாய் இருக்கும்',

(மத். 26.14.25).

சதி அம்பலமாக இருக்கும் வேளையும் இயேசு உணவருந்தும் சீடர்களுடன் உரையாடுகிறார். இன்று நடைபெறும் விருந்துகள் முகமனுக்காக, உறவு என்றும், நட்பு என்றும் கூடிக்குலாவும் போது, அடி மனதில் எழும் குரோத எண்ணங்கள் எத்தனையோ பலர் மனங்களில் எழுகின்றன. இதனை உணர்வாயா? உண்மையில் மனத்தைப் படம்பிடித்துக் காட்டும் கருவி மட்டும் இருந்திருந்தால், எத்தனை விருந்தோம்பல்களில் எத்தனையோ பல விபரீதங்களே ஏற்பட்டிருக்கும்.

யேசுவோ மற்றவர் மனங்களில் உள்ளதை இறையருளால் அறிந்து எடுத்துக் கூறினார் பார்த்தாயா? இப்படி உன் செப, தப, தான முயற்சியிலும் உன் மனதை உணர்ந்து கொள்ளும் வல்லமை உள்ள இறைவனுக்காகச் செலவிடும் இந்நாளில் வழிபாட்டில் மட்டும் வெளிவேடம் காட்டாது, வாழ்விலும் புனித வழி சென்று பாடுகளின் பயணத்தைத் தொடர, இயேசுவோடு இறப்பில் பங்கெடுத்தாலே, உன் வாழ்விலும் உயிர்ப்பை உணரமுடியும். இது குறித்துச் சிந்திப்பாயா?

- ஜோசப் பாலா

## தேர்தலின் பின் வன்செயல்கள்

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் பதுளை மாவட்டம் லுணுகல பிரதேசத்தில் இடம் பெற்ற வன் முறைச் சம்பவம் ஒன்றில் 15 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் சுமார் 300 வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாக தேர்தலைக் கண்காணித்த பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். கோட்டை, நீதிமன்றம் ஊடாகச் செல்லும் யாழ். பிரதான வீதி திருத்தம் செய்யப்படவுள்ளது.

இதற்காக கற்கள் போடப்படும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன. (அ-173)

## 45 ஆம் நாள் கண்ணீர் நினைவலைகள்



**குணசேகரம் துஸ்யந்தன்**
**(கணேஸ்)**

உதிர்வு: **10 - 11 - 1978**
மறைவு: **10 - 02 - 1997**

எமது உயிர் நண்பன்
எம்மிடமிருந்து பிரிந்து ஆண்டுகள்
சென்றாலும் என்றும் அவன்
நினைவில்...!

நண்பர்கள்,
ஆவரங்கால் கிழக்கு,
**A/L 97 மாணவர்கள்.**

(9434)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பாடசாலைகளுக்கு 40 தற்காலிகக் கொட்டில்கள்

## 'யுனிசெவ்' அமைத்துக் கொடுக்கும்

வவுனியா, மார்ச் 26

வன்னிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கென 40 தற்காலிக கொட்டில்களை அமைத்துக் கொடுப்பதற்கு யுனிசெவ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகள் பலவற்றில் அகதிகள் தங்கியிருப்பதனாலேயே மாணவர்களுக்கென இத்தகைய கொட்டில்கள் அமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சியில் 16 கொட்டில்களும் முல்லைத்தீவில் 15 கொட்டில்களும் வவுனியாவில் 4 கொட்டில்களும் மன்னாரில் 3 கொட்டில்களும் ஏற்கனவே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றின்போது வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கு கரும்பலகைகள், வெண்கட்டி, மாணவர் புத்தகப்பை, மாணவர் உடைகள் ஆகியவற்றை உதவியாக அனுப்பி வைக்க யுனிசெவ் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.

(இ)

## விதவைகள், அநாதைகளுக்கு என உள்ளூராட்சி ஓய்வூதியத்தில் நிதி அறவிடுவது நிறுத்தம்

இளைப்பாறிய பின்பு உள்ளூராட்சி சேவை ஓய்வூதியர்களிடம் இருந்து விதவைகள், அநாதைகளுக்கான நிதிக்கென செய்யப்பட்டு வந்த அறவீடுகள் யாவும் கடந்த பெப்ரவரி மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளன

இந்த அறவீடுகளை நிறுத்துமாறு உள்ளூராட்சி ஓய்வூதியர் சங்கமும். வடமாகாண ஓய்வூதியர் சம்மேளனமும் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக கோரிக்கை விடுத்துவந்தன.

உள்ளூராட்சி விதவைகள் அநாதைகள் நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கான திருத்த வரைவு நிறைவேற்றப்பட்டதை அடுத்தே இந்த அறவீடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(ஐ)

## 'ஹெல்பொப்' வால் நட்சத்திரத்தை இரவு 7 மணி முதல் பார்க்கலாம்

கொழும்பு, மார்ச் 25

''ஹெல் பொப்'' என்ற வால் நட்சத்திரம் இப்போது இலங்கையின் பல பாகங்களிலும் தென்படுவதாக அறிவிக்கப்படுகிறது. இரவு 7மணி முதல் 9 மணி வரை வடக்கு, வடமேல் திசையில் வானில் வெறும் கண்களால் பார்க்க முடிகிறது எனச் சொல்லப்படுகிறது.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை இந்த வால் நட்சத்திரத்தைப் பார்க்க முடியும் என்று இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வால் நட்சத்திரம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது—

சுமார் 4,200 வருடங்களுக்கு ஒருமுறை தென்படக்கூடிய ஹெல் பொப் என்ற இந்த நட்சத்திரத்தை தற்போது காணும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

ஏப்ரல் முதலாம் திகதிவரையில் இதனை இரவு 7-9 மணி வரை வடக்கு, வடமேல் வானில் சாதாரண கண்களாலும் காண முடியும். எனினும் தொலைநோக்கி மூலம் இதனை மேலும் தெளிவாகக் காணலாம்.

ஏப்ரல் 1ஆம் திகதி இந்த வால் நட்சத்திரம் சூரியனை அண்மிப்பதால் அன்றைய தினம் பூமியில் இருந்து 8 கோடி 49 இலட்சம் மைல் தொலைவில் இது இருக்கும்.

இதனை சுமார் 4 ஆயிரம் பாடசாலைகளைச் சேர்ந்த க. பொ. த. (சா. தர) மற்றும் (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கு காணும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்வகையில்தொலைநோக்கி கருவிகள் தென்னிலங்கையில் வழங்கப்பட்டு வருகின்றன.

(அ)

# இஸ்ரேலியப் பிரதமரின் விடாப்பிடியான கொள்கைகளால் சமாதான முயற்சி பெரும் பின்னடைவைச் சந்திக்கின்றது

**நாடுகளுக்கிடையே அல்லது உள் நாட்டில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு மூன்றாம் தரப்பு ஒன்று மத்தியஸ்தம் வகிப்பது இன்று உலக வழக்காக மாறிவருகிறது.**

**இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்கத் தான் தயார்என இலங்கை வந்துள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் தெரிவித்துள்ளார். அவரது தாய் நாடான பலஸ்தீனத்தின் இன்றைய நிலைமை என்ன? அது தொடர்பான கண்ணோட்டம் இது.**

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் வேளை மத்திய கிழக்கில் நிலைமைகள் மிகவும் மோசமடைந்துள்ளன.

பலஸ்தீனம் தனது பாது

## அமெரிக்காவின் இரட்டை வேடமும் மத்திய கிழக்கின் பிந்திய நிலைவரமும்

காப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என இஸ்ரேல் வலியுறுத்தி வரும் வேளையில் அமைதியை மீண்டும் உருவாக்க வேண்டுமாயின் கிழக்கு ஜெருஸலேமில் இஸ்ரேல் மேற்கொள்ளும் யூதக் குடியிருப்புத் திட்



நத்தானியாகு

டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என பலஸ்தீனம் தெரிவித்துள்ளது.

### ரெல் அவிவ் குண்டு வெடிப்பு

கடந்த வெள்ளிக்கிழமை ரெல் அவிவ் நகரில் உணவு விடுதி ஒன்றில் குண்டு வெடித்து மூவர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் அமைதி என்பது ஒரு கனவாக மாறியுள்ளது.

ரெல் அவிவ் நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை யடுத்து இஸ்ரேல்,பலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர்களிடையில் கலவரங்கள் உருவாகின.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலஸ்தீனமக்கள் வாழ்ந்து வரும் பகுதிகளை மூடி பலத்த பாதுகாப்பு ஒழுங்குகளை இஸ்ரேல் மேற்கொள்ள முற்பட்டதே பலஸ்தீன மக்களுக்கு ஆத்திரமேற்படக் காரணமாக அமைந்தது.

தங்களது மண் என பலஸ்தீன மக்கள் கருதும் கிழக்கு ஜெருசலேமில் 6 ஆயிரம் யூதக் குடியிருப்புகள் அமைப்பதற்கு இஸ்ரேலிய புல்டோசர்கள் வந்தது பலஸ்தீன மக்களின் கோபத்தை அதிகரிக்கச் செய்தது.

இஸ்ரேலின் பாதுகாப்பு ஒழுங்குகளை நிறைவேற்றுவது அந்நாட்டின்கடமை என பலஸ்தீன பாதுகாப்புத் துறைத் தலைவர் தெரிவிக்கிறார்.

சமாதானத்தை மதித்து அதை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளே நிரந்தரத் தீர்வாக அமையும். இஸ்ரேலுக்கு உள்ள ஒரே ஒரு மார்க்கமும் இதுதான் இஸ்ரேல் இதைமறந்து, வேறு விதத்தில் செயற்பட முயன்றால் நிலைமைகள் மேலும் மோசமடையலாம்.

ஹெப்றோன் நகரமாயினும் சரி மேற்குக் கரையிலுள்ள வேறு எந்த தகரமாயினும் சரி நிலைமை இதுவே; ஆனால் இஸ்ரேல் நிலைமைகளை வேறு கோணத்தில் பார்க்கிறது. இஸ்ரேலின் உடனடிப் பாதுகாப்புத் தேவைகள் குறித்தே இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு கவனம் செலுத்துகிறார். பலஸ்தீனர்கள் ஒத்துழைப்பு வழங்காதுவிடின் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சில் தான் பங்கு கொள்ள முடியாது என்ற விதத்தில் நத்தனியாகு எச்சரித்து வருகிறார்.

''அமைதியை உருவாக்குவது தொடர்பாக நிபந்தனைகளை முன்வைத்துள்ளேன். பலஸ்தீனர்கள் வாக்குறுதியளித்தபடி பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராட வேண்டும். ஆனால் பலஸ்தீனர்கள் பயங்கரவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இந்த நிலைமையில் மாற்றங்களை [illegible] முடியவில்லை. [illegible]வாதத்தை முடிவுக்குக் கொண்டுவர பலஸ்தீனர்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதுவே எனக்குத் தேவையானது இது அவர்கள் அளித்த வாக்குறுதிகளில் ஒன்று. முதலில் இதைச் செய்யட்டும். அதன் பின்னர் ஏனைய விடயங்கள் குறித்து நாங்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளலாம்'' என்று நத்தனியாகு தெரிவித்துள்ளார்.

### இஸ்ரேலிய அரசின் நிபந்தனைகள்

சட்டவிரோதமான ஆயுதங்களைத் தடைசெய்வது இஸ்ரேலுக்குத் தேவைப்படும் நபர்களைக் கைது செய்து அவர்களை இஸ்ரேலிடம் கையளிப்பது; ஹமாஸ் இயக்கத்தின் உறுப்பினர்கள் எனக் சந்தேகப்படுவோரை ஒட்டுமொத்தமாக கைது செய்வது ஆகிய விடயங்களை பலஸ்தீன நிர்வாகம் நிறைவேற்ற வேண்டும் என இஸ்ரேல் அரசு எதிர்பார்க்கிறது.

இருப்பினும் வன்முறைச் சம்பவங்களை பலஸ்தீனம் கண்டித்துள்ளபோதிலும் இஸ்ரேல் முன்வைத்தள்ள நிபந்தனைகளை அது நிராகரித்துள்ளது.

''பலஸ்தீனத்தை குறைத்து மதிப்பிட்டு செயற்பட இஸ்ரேல் முனையுமாயின் அது தவறான முடிவாக அமையும்'' என பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''கிழக்கு ஜெருஸலேமில் யூதக்குடியிருப்பை அமைக்க இஸ்ரேல் எடுத்துவரும் நடவடிக்கைகளால் உருவாகி

**தொகுப்பு: கஜனி**

யுள்ள கோப உணர்வுகள் எவ்வாறாயினும் அது மேலும் பல கலவரங்களுக்கு வழி வகுக்கும். பலஸ்தீன மக்களாகிய நாங்கள் வெற்றி பெறும் விளையாட்டில் ஈடுபட்டுள்ளோம். ஆனால் அவர்கள் (இஸ்ரேலியர்கள்) வெற்றி பெற முனைபவர்களைத் தோற்கடிக்கும் விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். நிரந்தரமாகத் தோல்வியைத் தழுவுபவர்கள் என எங்களுக்கு நாமம் சூட்டிக் கொண்டு அதே நேரத்தில் நாங்கள் சண்டை பிடிக்கின்றோம் என எவ்வாறு குற்றம் [illegible] — இவ்வாறு [illegible] பிரதிநிதி அபிக்ஸ்ஷாபியா தெரிவிக்கிறார்.

### அமெரிக்கத் தலையீடு

பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட தடங்கல்களை போக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் அமெரிக்காவின் தலையீடும் நிலைமைகளைக் குழப்புகிறது.

இஸ்ரேலின் யூதக்குடியிருப்பு அமைக்கும் திட்டத்தை அமெரிக்கா கண்டிக்கிறது. ஆனால் ஐ நா.சபையில் அதற்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா தனது 'வீற்றோ' என்னும் ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தத் தீர்மானத்தைத் தோற்கடித்தது.

சர்வதேச அழுத்தங்கள் இஸ்ரேலின் முரண்டு பிடிக்கும் கொள்கையை மேலும் மோசமாக்கும் எனவும் அக்காரணத்தினாலேயே தான் ஐ. நா. சபையில் அந்தத் தீர்மானத்திற்கு எதிராக ''வீற்றோ'' அதிகாரத்தைப் பயன் படுத்தியதாகவும் அமெரிக்கா தனது செயலுக்கு விளக்கமளிக்கிறது.

அமெரிக்காவுக்கான முன்னாள் இஸ்ரேலியத் தூதுவர் எட்வேட் ஜெரிடியன் பின்வருமாறு கூறுகிறார்:

''சமாதான முயற்சிகள் இன்னும் முன்னெடுக்கக் கூடிய நிலையிலேயே உள்ளன. ஆனால் இந்தப் பேச்சுவார்த்தைகள் தவறான வழியில் சென்றுள்ளன என்பதை ஒத்துக் கொள்கிறேன். இறுதியாக பேசித் தீர்வு காண வேண்டிய விடயங்களாக இஸ்ரேலின் குடியிருப்பு அமைக்கும் திட்டம், பலஸ்தீன யுத்த அகதிகள், நாடுகளின் எல்லை மற்றும் பாதுகாப்பு நிலைமை ஆகியன அமைகின்றன. அடுத்து முக்கியமாக ஜெருசலேம் பற்றிய விடயம்.

''யூதக் குடியிருப்பு அமைக்கும் திட்டத்தில் இரு முக்கிய விடயங்கள் அடங்கியுள்ளன. ஒன்று இஸ்ரேல் குடியிருப்பு மற்றது ஜெருஸலேம்''.

''எவ்வாறாயினும் பேச்சுவார்த்தைகள் முறிவடைவதைத் தடுப்பதற்கு இரு தரப்பும் இணக்கம் காண வேண்டும்''

''காரணம் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் வன்முறைகள் தான் மாற்று வழியாக அமையும். அவ்வாறான ஒரு நிலைமை உருவானால் இதுவரை சமாதானம் பற்றி நாம் கண்ட கனவுகள் வீணாகிவிடும்''— என்கிறார்.

### நத்தனியாகுவின் தேர்தல் வாக்குறுதி

கடந்த பொதுத் தேர்தலின்போது இஸ்ரேலில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவேன் என பெஞ்சமின் நத்தனியாகு வாக்குறுதி அளித்திருந்தார். தேர்தலின் போது அவர் அளித்த வாக்குறுதியை தற்போது தோன்றியுள்ள புதிய நிலைமைக்கேற்ப எவ்வாறு அவர் நிறைவேற்றப் போகிறார்? என அவரது ஆதரவாளர்கள் உன்னிப்பாகக் கவனித்த வண்ணம் உள்ளனர். நத்தனியாகுவிற்கு இது ஒரு சோதனைக் களம் என்பதே அவர்களது கருத்தாகும்.

கிழக்கு ஜெருஸலேமில் யூதக்குடியிருபபு அமைக்கும் திட்டம் பேச்சுவார்த்தைகளுக்கு உட்படாத விடயம்



யசீர் அரபாத்

என்பதே இஸ்ரேலின் வாதமாகும். யூதக் குடியிருப்புத் திட்டத்தைக் கைவிடுவதுஅரசியல் பின்னடைவை ஏற்படுத்தும் என இஸ்ரேல் அரசு நினைக்கிறது. இந்நிலையில் இஸ்ரேல் தொடர்ந்து முரண்டு பிடித்தால் மீண்டும் ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு மாற்றுவழி இல்லை என்பதே பல பலஸ்தீனர்களின் கருத்தாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### நூலாலயம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள் லிங் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, சாவகச்சேரி.

(45932)

### தவறிவிட்டது

சோமசுந்தரம் நாகேஸ்வரி என்பவரது 606092822V இலக்க தேசிய அடையாள அட்டை, 22-3-97 அன்று கரந்தன் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சோமசுந்தரம் ஈசன், காசிப்பிள்ளை கடையடி, கரந்தன் வீதி, நீர்வேலி எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். [45975]

## மோசமான நிலையில் வீதி

சாவகச்சேரி, மார்ச் 26

சாவகச்சேரியில் இருந்து தனங்கிளப்பு சந்தியை இணைக்கும் வீதியும் —

நாவற்குழியிலிருந்து தனங்கிளப்பு சந்தியை இணைக்கும் கேரதீவு வீதியும் — குண்டும் குழியுமாகவுள்ளன.

(இ-31)

## தவறணையால் மக்கள் சிரமம்

தென்மராட்சி, மார்ச் 26

குடியிருப்புக்களுக்கு மத்தியில் கள்ளுத்தவறணை திறக்கப்பட்டதால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

வரணி வடக்கில் மக்கள் நெருக்கமாக வாழும் கறுக்காய் என்னும் இடத்திலேயே இந்தத் தவறணை திறக்கப்பட்டுள்ளது. (இ-117)

## அமைதி வேண்டி பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மார்ச் 26

நல்லூர் செம்மணி வீதியில் உள்ள யோகர் சுவாமி ஞான யோக குருகுல நிலையத்தில் சகல ஜீவராசிகளினதும் சாந்திக்கான பிரார்த்தனை இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)


## G. A. Q., G. S. Q - 97/98
**(வெளிவாரி பேராதனை)**

பதிவுசெய்யும் இறுதித் திகதி: 30 - 03 - 97

விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
பதிவுகள் யாவும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

### பட்டப்படிப்புகள் கல்லூரி

73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(45972)


## தென்னிந்திய திருச்சபை
**யாழ். ஆதீனம்**

சமயக் கல்விக் குழு வழங்கும்

உயிர்த்தெழுந்த திருநாள் பஜனையும் இசைநாடகமும்

உடுவில் மகளிர் கல்லூரி திறந்த வெளியரங்கில் மார்ச் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**ஜீ. இராஜநாயகம்,**
சமயக் கல்விக் குழு, இயக்குநர்,
தெ. இ. தி. யா. ஆ.

(சி/370)

மானிப்பாய்

## மருதடி விநாயகர் ஆலய அறிவித்தல்

மானிப்பாய்-மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 29 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இம் மஹோற்சவ காலங்களில் ஆலய சுற்றாடல்களில் தற்காலிகமான விற்பனை நிலையங்கள் கடைகள் எதுவும் அமைப்பதற்கு ஆலய நிர்வாகத்தினரால் இம் முறை தடை விதிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் எல்லைக்குள் நிரந்தரமாக உள்ள விற்பனை நிலையங்கள், தவிர்ந்த - தற்காலிக கடைகள் எதுவும் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

- ✶ மருதடி விநாயகர் ஆலய வாசலில் இருந்துயாழ்ப்பாணம் வீதியில் மானிப்பாய் மத்திய சந்தையடி வரையும்.
- ✶ சண்டிலிப்பாய் வீதியில் பிப்பிலிச் சுடலைச் சந்தி வரையும்.
- ✶ உடுவில் வீதியில் உடுவில் றோஸ்பிறான்ட் ரொபிக்கம்பனி வரையும்.

**மருதடி விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் மானிப்பாய்.**

(சி-371)

உ

வட்டுக்கோட்டை

## இந்துவாலிபர் சங்கம்

24 - 03 - 97 இல் நடைபெற்ற

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு இல. 328
2 ஆம் பரிசு இல. 2503
3 ஆம் பரிசு இல. 2141

ஆறுதல் பரிசு இலக்கங்கள்.

(1) 1868 (2) 1730 (3) 2564 (4) 2310
(5) 2266 (6) 989 (7) 538

ச. லோகேஸ்வரன்
தலைவர்.

க. சதீசன்
செயலாளர்.

க. கேதீசன்
பொருளாளர்.

(சி/372)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 06 — 04 — 1926

உதிர்வு: 26 — 03 — 1996

### திருமதி பரமேஸ்வரி இராசையா

**திதி: 15 - 03 - 97**

பாசமுள்ள அன்னையே! அன்பின் உருவாய், பண்பின் சிகரமாய், இன்பமுடன் இனிதாக நாம் வாழ வழி வகுத்து நல்லதொரு குடும்பத் தலைவியாய் மக்கள் போற்ற வாழ்ந்த எம் குலவிளக்கு அணைந்து ஆண்டொன்று ஆனாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு என்றென்றும் மறையாது! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல்:
இ. இராமச்சந்திரன் (மகன்)
143, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(9431)

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு எட்டாம் ஆண்டு





அமரர் த. ஸ்ரீறங்கன்

பிறப்பு: 03-02-1949
இறப்பு: 05-04-1996

திருமதி ஸ்ரீ. சத்தியலீலா

பிறப்பு: 18-10-1951
இறப்பு: 18-04-1989

**திதி: 26-03-1997**

தங்கள் அரவணைப்பின்றி நித்தம் உங்கள் பிரிவை எண்ணித் துயருறும் பிள்ளைகள் மூவருடனும் நீக்கமற எங்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட நினைவலைகளுடன் உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீறமணன், ஸ்ரீசங்கர், ஸ்ரீறஜீவன் (பிள்ளைகள்)
மற்றும்
குடும்ப உறவினர்கள்.

தகவல்: திருமதி பூ. தம்பிஐயா,
நாவலடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(9429)

எம் இல்லக விளக்கின்

## 31 ஆம் நினைவு நாளும் அந்தியேட்டி அழைப்பும்



உருவம்: 02 — 02 — 1924

அருவம்: 26 — 02 — 1997

### திருமதி மயில்வாகனம் பூரணம்

பூரணமாய் எம்மனதுள்
புகுந்து நிழலாகி
நாளெல்லாம் வாழும்
நினைவாய் நலம் சொரிந்த
தாயே! இமைப்பொழுதில் ...
தணலிடை நாம் உருக ...
ஏனம்மா ... இந்த
எழுத்து ...?

உங்கள் ஆத்மா சாந்தி பெற அனைவரும் பிரார்த்திக்கின்றோம். 28- 03 97 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னை இல்லம்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

**கணவர், சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(9427)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புலமைப் பரிசில் பரீட்சைகள்

இலவசக் கல்வித் திட்டம் அறிமுகமான கையோடு ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டது. வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், விவேகம் உடையவர்களாக இருந்த போதிலும் பண வசதி இல்லாமையால் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவே இந்தப் புலமைப் பரிசில் பரீட்சை முறை வகுக்கப்பட்டது.

கடந்த பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு வரை, புலமைப் பரிசில் பரீட்சை அதனது நோக்கத்தை மிகப் பெரிய அளவில், முழு அளவில் எய்தியது.

ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் என்று பண வசதி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான கிராமப்புறத்து மாணவர்கள் இதனால் பயனடைந்தார்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், பட்டதாரிகள் என்று உயர் கல்வி கற்கும் வாய்ப்பை ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் திட்டம், விவேகமுள்ள ஏழை மாணவருக்கு வழங்கியது.

ஆனால் இப்போது அந்த நிலை அருகிவிட்டது, பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கான அளவுகோலாகவே ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெரும்பாலும் மாறிவிட்டது.

இதனால் கிராமப்புற ஏழை மாணவர்கள் விவேகமுள்ளவர்களாக இருப்பினும் புலமைப் பரிசில் பரீட்சையில் தவறிவிடுவதும் உண்டு.

இது உண்மையே. இந்தக் காரணத்தை முன்னிறுத்தி எட்டாம் ஆண்டிலும் புதிதாக புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றை நடத்தி, வசதி குறைந்த மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சிபார்சு ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில், எட்டாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வியைப்பூர்த்தி செய்யும் வரை புலமைப்பரிசில் நிதி உதவி வழங்கப்படும்.

பொருளாதாரக் கஷ்டம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த, விவேகமுள்ள பிள்ளைகளுக்கு உதவுவதனை முழு நோக்கமாகக் கொண்டு அந்த நோக்கத்தை நேர்மையாக எய்தும் நடைமுறை வகுக்கப்பட்டு, கண்ணியமாகச் செயற்படுத்தப்படின் புதிய யோசனை வரவேற்கப்பட வேண்டியதே.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சந்தர்ப்பவசத்தால் தவறிய விவேகமான ஏழை மாணவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்குவது நல்லதே.

பிரபல பாடசாலைகள் அனுமதிக்கு வேறு ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தி —

வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த விவேகமான மாணவர்களுக்கு உதவும் திட்டமாக 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்பரீட்சையை முந்திய நிலைக்கு மாற்றுவது குறித்தும் சிந்திக்கப்பட வேண்டும்.

# கிளிநொச்சியில் கடும் வரட்சியால் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு

## அரச அதிபர் தகவல்

கிளிநொச்சி மாவட்டத்தில் உணவு நெருக்கடி மோசமடைந்து வருகிறது. கடுமையான வரட்சி நிலவுவதால் குடி தண்ணீருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் மருந்துத் தட்டுப்பாடும் நிலவுகிறது. ஆகவே உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்றை கிளிநொச்சி மாவட்டத்துக்கு அனுப்பி, இடம் பெயர்ந்த மற்றும் நிரந்தரமாக வசிக்கும் மக்களினது அவல நிலைமைகளைப் பார்வையிடுமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ். தில்லைநடராஜா கோரியுள்ளார்.

கடந்த ஒன்றரை மாதகாலமாக உணவுப் பொருள்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வந்து சேரவில்லை. உலர் உணவுப் பொருள்கள் உரிய நேரத்தில் கிடைக்காததால் கடந்த மாத முடிவுக்குள் வழங்கி முடிந்திருக்க வேண்டிய 16ஆவதுதொடர் உணவு முத்திரைக்கான உணவு விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் 63 ஆயிரத்து 916 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து56 ஆயிரத்து 908 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் சுமார் 50 நாள்களாக தடைப்பட்டிருந்த வன்னிப் பகுதிக்குரிய நிவாரண உணவுப் பொருள்கள் கடந்த சனிக்கிழமை முதல் அனுப்பிவைக்கப்படுகின்றன.

மாவை ஏற்றிக் கொண்டு 24 லொறிகள் முல்லைத்தீவு மாவட்டம் சென்றுள்ளன.

நேற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கான உணவுப் பொருள்கள் கொண்டு செல்லப்படவிருந்ததாக வவுனியாவில் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-10)

## பதில் பிரதேச செயலாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ச. பேரானந்தன் உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டு, பதில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றுகின்றார்.

யாழ். பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய க. குணராசா யாழ். பல்கலைக்கழக பதிவாளராக நியமனம் பெற்றதையடுத்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

# கைதானோரில் சிலர் குறித்த விவரங்கள் ஈ.பி.டி.பி. யிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் கைதான 150 பேர் தொடர்பாக யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகம் சமர்ப்பித்தபட்டியலில் உள்ளவர்களில் சிலர் பற்றிய விவரங்களை 51 ஆவது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலேகல்ல தமக்கு அனுப்பியுள்ளார் என யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகம் தெரிவித்தது.

கைதானவர்களில் 9 பேர் காங்கேசன்துறை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

11 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 9 பேர் விவரம் வருமாறு:-

★ மார்க்கண்டு பாஸ்கரன் (சாவகச்சேரி)

★ சிவசுப்பிரமணியம் சிவாகரன் (சாவகச்சேரி வடக்கு)

★ கந்தசாமி சிவகுமார் (யாழ்ப்பாணம்)

★ மாணிக்கம் தியாகராசா (கொட்டடி)

★ சுப்பிரமணியம் செல்வநிதி (யாழ்ப்பாணம்)

★ சிவசுப்ரமணியம் ரமேஷ் (சாவகச்சேரி)

★ ஜோசப் பீற்றர் கொல்வின் (மானிப்பாய்)

★ வீரசிங்கம் சுதர்னகாந்தன்

★ எம். பிரபாகரன் (சர்வகச்சேரி வடக்கு)

விடுதலையான 11 பேர் பற்றிய விவரம் வருமாறு:-

★ மார்க்கண்டு நகுலேஸ்வரன் — (திருநெல்வேலி)

★ நல்லையா ஜெகநாதன் — (நாயன்மார்கட்டு)

★ கறுப்பையா குமார் — (யாழ்ப்பாணம்)

★ இராசன் ஜெகதீஸ்வரன் — (சுன்னாகம் தெற்கு)

★ கணேசன் சதீஸ்குமார்

★ மாணிக்கம் இராஜவேல் — (புத்தூர் கிழக்கு)

★ சின்னத்தம்பி பரமநாதன் — (புத்தூர் கிழக்கு)

★ நகுலராசா இராசன் — (யாழ்ப்பாணம்)

★ சின்னத்தம்பி பரமநாதன் — (புத்தூர் கிழக்கு)

★ கந்தையா கணேசபிள்ளை — (சண்டிலிப்பாய்)

★ இராசன் ஜெயந்தன் — (இருபாலை).

(இ-3)

வன்னியிலிருந்து

# நேற்றும் ஒரு படகில் 34 பேர் வந்தனர்

குருநகர், மார்ச் 26

வன்னியில் இருந்து ஒரு பிளாஸ்ரிக் படகில் நேற்றுக் காலையும் அகதிகள் குடாக் கடலினூடாக குருநகர் இறங்கு துறைக்கு வந்து சேர்ந்தனர்.

இதில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேர் இருந்தனர்.

இவர்கள் கரவெட்டி, கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில் ஆகிய இடங்களில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னிக்கு இடம்பெயர்த்தவர்கள் ஆவர்.

நேற்று முன்தினம் வன்னியில் இருந்து வள்ளங்கள் மூலம் குருநகர் இறங்கு துறைக்கு வந்து சேர்ந்தவர்களுடன் இவர்களும் குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையில் இராணுவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள்.(இ-15-51)

# வன்னியிலிருந்து வந்தோர் மழையினால் பெரும் அவதி

குருநகர், மார்ச் 26

வன்னியில் இருந்து வள்ளங்கள் மூலம் நேற்றும் நேற்று முன்தினமும் குருநகர் இறங்கு துறைக்கு வந்து சேர்ந்து குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையில் தங்கியுள்ள அகதிகள் நேற்றைய தினம் நண்பகல் பெய்த மழையினால் மிகுந்த சிரமம் அடைந்தனர்.

இவர்கள் தங்கியுள்ள சீநோர் வலைத் தொழிற்சாலை யுத்தம் காரணமாக சேதமடைந்துள்ளது.

இதன் ஓடுகள் பலவும் உடைந்திருப்பதால் இவர்கள் அனைவரும் நனைந்ததுடன் இவர்கள் கொண்டுவந்த உடுப்புக்களும் நனைந்தன.

மேலும் இங்கு மூன்று மலசல கூடங்களே உள்ளதனால் இவர்கள் அனைவருக்கும் இவை போதாமலுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

# தந்தை செல்வா நூற்றாண்டு விழா கிழக்கிலும் கொண்டாட ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 26

தந்தை செல்வா நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் பரவலாக நடைபெற்று வருகின்றன.

இதற்கென மட்டக்களப்புத் தொகுதில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலும் —

பட்டிருப்புத் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.செல்வராஜா தலைமையிலும் —

கல்குடா தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் கி. துரைராஜசிங்கம் தலைமையிலும் விழாக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 31ஆம் திகதி விசேட வழிபாடுகளுடன் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

மட்டக்களப்பு தாண்டவன்வெளி கிறிஸ்தவ தேவாலயத்திலும், அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் கோயிலிலும் அன்று விசேட சமய வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

**நாளை**

**பங்குனி 14**

வியாழக்கிழமை

திதி: திருதியை பிற்பகல் 1.35 வரை.

நட்சத்திரம்: சுவாதி பிற்பகல் 03.31 வரை

சுபநேரம்: 07.44-09.14

[illegible]

பழைய நேரப்படி)

# ஹெலியை புலிகளே தாக்கியதாக உளவுத்தகவல் அறிக்கைதெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

இம்மாதம் 19 ஆம் திகதி முல்லைத்தீவுப் பிரதேசத்தில் காணாமற்போன எம். ஐ. 24 ரக ஹெலி, விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாக அரசாங்க உளவுத் தகவல் அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த அறிக்கை விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்காவுக்கு கிடைத்துள்ளதாக விமானப் படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என ''லங்காதீப'' சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது. (இ-10)

## பதிவாளர் நாயகம்

பதிவாளர் நாயகமாகப் பணியாற்றிய கே. ஏ. குணரத்தின சேவையிலிருந்து இளைப்பாறுவதைத் தொடர்ந்து ஜே. வி. விபுலகுண பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜே. வி. விபுலகுண புதிய நியமனத்தை ஏற்பதற்கு முன்னர் பதிவாளர் நாயக திணைக்களத்தில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவும் தென் பிராந்திய பிரதிப் பதிவாளர் நாயகமாகவும் பணியாற்றினார். (இ-10)

## குப்பி விளக்கு தீப்பிடித்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

குப்பி விளக்கு தட்டுண்டு தீ பற்றி எரிந்து ஒருவர் படுகாயமடைந்தார்.

ஏழாலையில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்வரத்தினம் ஸ்ரீஸ்காந்தராசா (வயது 35) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# ஏறாவூரில் இறந்த இளைஞர்கள் குறித்து விசாரணை வேண்டும்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 26

ஏறாவூர் தளவாயில் பகுதியில் இராணுவ சீருடையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட இரு இளைஞர்களின் மரணம் குறித்து விசாரணை நடத்துமாறு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

ஏறாவூர் தளவாய் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி இராணுவ சீருடை தரித்தவர்களால் சீனித்தம்பி கோணேஸ்வரன்(28 வயது), முத்தையா அருள் (23 வயது) ஆகியோர் கைது செய்யப்பட்டதாகவும் —

பின்னர் கடந்த சனிக்கிழமை இவர்களது சடலங்கள் பாலச்சோலை பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாகவும்—

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் – அவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

சடலங்களில் இருந்த ஆடைகள் மற்றும் செருப்பு ஆகியவற்றைக் கொண்டே இவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

காலை வேளையில் இவர்கள் மீன்பிடிக்கச் சென்ற சமயமே கைதானதாகவும்—

இவ்விருவரும் புதைக்கப்பட்ட இடத்தை பன்றிகள் தோண்டியதையடுத்து துர்நாற்றம் வீசியதாகவும்—

அதையடுத்து அந்த இடம் தோண்டப்பட்ட சமயம் சடலம் கைப்பற்றப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு கடற் சமரில்

# ஐவரே இறந்ததாக புலிகள் தெரிவிப்பு

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் சுமார் 100 புலிகள் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்புவட்டாரங்கள் கொடுத்த தகவலுக்குமாறாக விடுதலைப் புலிகளின் வானொலிச் செய்தி இருப்பதாக ஏ.எவ்.பி செய்தி நேற்றுத் தெரிவித்தது.

புலிகளின் வானொலி அறிவிப்பின்படி நான்கு கடற்கரும்புலிகளும் ஒரு கடற்புலியும் மட்டுமே கொல்லப்பட்டுள்ளனர் என்றும்—

கடற்படையின் இரண்டு படகுகள் அழிக்கப்பட்டன என்றும்—தெரியவந்துள்ளது.

கடற்படைத்தரப்பில்கொல்லப்பட்ட நபர்களின் எண்ணிக்கை பற்றி புலிகளின் வானொலி எதுவும் குறிப்பிடவில்லை.

தெஹிவளை - கல்கிசை

# மாநகரசபை அலுவலகத்துக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்க முடிவு

கொழும்பு, மார்ச் 26

தெஹிவளை — கல்கிஸை மாநகர சபையின் புதிய முதல்வரும் நகரசபை உறுப்பினர்களும் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளும் வரை மாநகரசபை அலுவலகத்துக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

அமைச்சர் சி.வி. குணரட்ண விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து கல்கிஸை பொலீஸ் அத்தியட்சகர் பத்மசிறி வியனகே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

தோல்வியடைந்த வேட்பாளர்கள் மாநகரசபையின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கக் கூடும் என்றும் ஆவணங்களைச் சேதப்படுத்தக் கூடும் என்றும் பொலீஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (இ-5)

# தீர்வுத் திட்டம் துரிதமாக அமுலுக்கு வரவேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். தெரிவிப்பு

'அரசியல்வாதிகளின் கணிப்பீட்டிலும் பார்க்க வாக்காளர் அதிகளவு மன முதிர்ச்சியையும் நியாயமான சிந்தனைகளையும் கொண்டுள்ளனர். ஆகவே அதிகாரப் பகிர்வு தொடர்பாக அரசாங்கம் ஆரம்பித்துள்ள முயற்சிகள் மக்களின் ஆதரவை இழந்து விடுவோம் என்று அச்சப்படாமல் துரிதமாக நிறைவேற்றப்படவேண்டும்'

இப்படி ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ்) வலியுறுத்தி உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை அடுத்து இந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் கே.சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில், இரு பெரும்பான்மை சிங்களக் கட்சிகளும் மக்களின் அரசியல் முதிர்ச்சியை விளங்கிக் கொள்வதற்கு உகந்த தருணம் இதுவென்று குறிப்பிட்டுள்ளார். (இ-5)

தேர்தல் முடிவு

# இனவாதிகளுக்கு பலமான அடி

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச், 26

''தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் இரு பெரும் கட்சிகளும் சேர்ந்து நடக்க வேண்டும் என்பதை உள்ளூராட்சித் தேர்தல் எடுத்துக் காட்டுகிறது. இத்தேர்தல் முடிவு இனவாதிகளுக்கு பலத்த அடியாக அமைந்துள்ளது''

இப்படி ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வை சிங்கள மக்கள் எதிர்க்கிறார்கள் என்று இரு பெரும் கட்சிகளும் இனியும் கூறிக் கொண்டு இருக்கமுடியாது என்பதை தேர்தல் காட்டுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வை எதிர்ப்பவர்களின் நோக்கத்தை தேர்தல் தவிடுபொடியாக்கிவிட்டது.

இனியும் இனவாதிகள் எதிர்ப்பார்கள் என்று காரணம் கூறாமல் வெறுப்பின் கடைசி எல்லையில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க இரு பெரும் கட்சிகளும் முன்வர வேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டார். (இ-3-150)

# தேர்தல் தோல்வி குறித்து இ. தொ. கா. விவாதிக்கும்

கொழும்பு, மார்ச் 26

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது வருங்காலத்திட்டம் குறித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விவாதிக்க இருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் தெரிவித்தார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் இ. தொ. கா. எதிர்கொண்ட தோல்விக்குப் பின்னர் அந்த அமைப்பு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

50 வருடகாலமாக செல்வாக்குடனிருந்து வரும் இ. தொ. காவை அழிப்பதற்கு பல சக்திகள் திட்டம் தீட்டிவந்தன. அத்தகைய சக்திகளுக்கு இது திருப்திகரமான சூழ்நிலையாகி விட்டது, ஆனால் மக்களின் அன்பு எம்மை விட்டு நீங்கி விடவில்லை தேர்தலின் போது இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவது சகஜம்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5)

# நெதர்லாந்துத் தூதருக்கு யாழ். கிழங்கு அன்பளிப்பு

கொழும்பு, மார்ச் 26

யாழ். விவசாயிகள் கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதுவரிடம் தமது உற்பத்தியான உருளைக் கிழங்கை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

தமக்கு விதை உருளைக் கிழங்கு வழங்கியதுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த அன்பளிப்பு இடம்பெற்றது

வடபகுதி புனர் நிர்மாண மீளக்குடியமர்வு அதிகார சபையின் தலைவரும், யாழ். அரசாங்க அதிபரும் விவசாயிகளின் சார்பில் இந்த அன்பளிப்பை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

## சுஸந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

வழக்கு இரத்தினபுரி நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயமே கொலைப் பயமுறுத்தல் பற்றித் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாலிய பீரிஸ் மேற்கண்ட விடயத்தை பிரஸ்தாபித்தார்.

இதையடுத்து சந்தேக நபர்களை வெலிக்கடைச் சிறைக்கு மாற்றுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-3-150)

## விசேட...

(முதலாம் பக்கத் தொடர்)

செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கவும் மற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

(மேலும் செய்திகள் 7 ஆம் பக்கத்தில்)

## கரு...

(முதலாம் பக்கத் தொர்டர்)

வாக்குக்களையும் —

அமைச்சர் பௌசியின் மகனான நவ்சர் பௌசி 14 ஆயிரத்து 532 வாக்குக்களும் —

முன்னாள் சபாநாயகர் எம். எச். முஹம்மதுவின் மகனான இந்தியாஸ் 6 ஆயிரத்து 919 வாக்குகளையும்— பெற்றுள்ளனர்.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தினா ஆயிரத்து 810 விருப்பு வக்குகளைப் பெற்று உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில்போட்டியிட்டகீதாஞ்சனா குணவர்த்தனா 4 ஆயிரத்து 114 வாக்குகளைப் பெற்று உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் மக்கள் ஐக்கிய முன்னணித்தலைவர் தினேஷ் குணவர்த்தனவின் சகோதரராவார். (இ-3-150)

## 500 பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணம் செய்ய விண்ணப்பித்தவர்கள் அனுமதி வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து 14 நாள்களுக்குள் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்றும்—

அதன் பின் பதிவுகள் ரத்தாகி விடும் என்றும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

விமானத்தில் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களின் பட்டியல் இலக்கம் 267-க்கு உட்பட்டவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் — பதிவு செய்து பயணத்தை உறுதிப்படுத்துமாறும் — கேட்கப்பட்டுள்ளது. (இ 3-150)

# சிறிலங்கா அணி வெற்றி

நியுசிலாந்து— சிறிலங்கா கிரிக்கெட் அணிகளுக்கிடையே நேற்று கிறைஸ்சேர்சில் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணி 6விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

வெற்றிபெறத்தேவையான 202 ஓட்டங்களை 4 விக்கெட்டுகளை இழந்து சிறிலங்கா அணிபெற்று வெற்றிபெற்றது.

முதலாவது ஒருநாள் போட்டி மழைகாரணமாகக் கைவிடப்பட்டது. இறுதி ஒரு நாள் போட்டி நாளை நடைபெறும். (இ-10)

# ரூ. 600 கோடி பெறுமதியான சீருடைத்துணி இறக்குமதி

பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக கல்வி, உயர் கல்வி அமைச்சு 600 கோடி ரூபா பெறுமதியான சீருடைத் துணிகளை சீனாவிலிருந்து இறக்குமதி செய்துள்ளது.

அடுத்த பாடசாலைத் தவணை ஆரம்பத்தில் இந்தத் துணிகள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் என அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆசியாவில் கல்வித் தரத்தில் உயர்வான நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று எனவும் —

எனவே இந்த நிலையைப் பேணுவதற்கு இலவசசீருடை விநியோகம் உதவியாக அமையும் எனவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார் (இ-10)

## கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ''2000 ஆம் ஆண்டை எதிர்கொள்வோம்'' என்ற கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (இ-5)

# அரபாத்தின் மத்தியஸ்த...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று இங்கிருந்து புறப்படு முன்னர் அதிபர் யசீர் அரபாத்தும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் கூட்டாகப் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்கள்.

அப்பொழுதே அரபாத்தின் உதவியை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை என்று அமைச்சர் கதிர்காமர் சொன்னார்.

அரபாத்தின் விருப்பம் அவரின் நல்லெண்ணத்தைக் காட்டுவதாகக் கூறிய வெளிவிவகார அமைச்சர்—

சிநேகபூர்வ முறையில் உதவி வழங்க அவர்முன்வந்த போதிலும், அரசாங்கத்துக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அவர் தெரிவிக்கவில்லை —என்றும் ஒரு கட்டத்தில் கூறினார்.

### பிரதியுபகாரமாக உதவவிருப்பம்

இதேவேளை பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டின் போது கூறியதாவது;-

பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆரம்ப காலத்திலிருந்து இலங்கை ஆதரித்துவந்தது.

அதற்கு நன்றியாக, பிரதியுபகாரமாக இலங்கையில் மீண்டும் அமைதியை உருவாக்குவதற்கும் என்னை அர்ப்பணிக்க நான் தயாராக உள்ளேன்.

அந்த அமைதியை எட்டுவதற்கு, அமைதி முயற்சிகளுக்கு உதவும் விதத்தில் விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும்.

இந்த நாட்டின் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானவழியில் கவனம் செலுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

### உதவி செய்வேன்

வீரத்துடனான சமாதானம் தேவை இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்யத் தயாராக உள்ளேன்.

இலங்கையில் நிலவும் குழப்ப நிலை குறித்து நான் கவலை அடைகின்றேன். சமாதனமே இந்தத் தருணத்தில் முக்கியமாகத் தேவைப்படுகின்றது — என்றார்.

அமைச்சர் கதிர்காமர் உரையாற்றுகையில், —

சமாதானத்தையும் யுத்தத்தையும் நன்கறிந்துள்ள அரபாத், சமாதானத்தை எய்துவது எவ்வளவு கஷ்டம் என்பதையும் அறிவார். ஒரு தரப்பினர் இணக்கத்துக்கு வராது அசாத்தியமான கோரிக்கைகளை முன்வைக்கும் வேளையில், கிடைத்த சமாதானத்தைப் பேணுவது எவ்வளவு கடினமானது என்பதையும் அரபாத் நன்கறிந்துள்ளார் — என்றார். (அ-3-5)

# கூடுதல் புள்ளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

தல் புள்ளிகளைப் பெற்ற முதல் 15 பேருக்கும் தற்காலிக அடிப்படையில் எழுதுநர் பதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மக்கள்வங்கியின் வட-வலய உதவிப் பொது முகாமையாளர் சிவசிதம்பரம் தெரிவித்தார்.

இந்த தகுதியுடையவர்கள் உடன் மக்கள் வங்கி பிரதேச தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோட்கப்பட்டுள்ளது. (இ-3)

# வெடிப் பொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் அப்பெட்டியை பொலீஸார் கைப்பற்றினர்.

100இக்கு மேற்பட்ட பொலீஸார் மேற்கொண்ட இத்தேடுதலில் கைப்பற்றப்பட்ட அப்பெட்டியில் கிறனேட், புகைக்குண்டு மற்றும் வெடிபொருள்கள் இருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்,

பொலீஸார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 298/2இல் கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org